மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 116, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. மாதேஸ்வரன், மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

116—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

***41332—திரு. சு. மாதேஸ்வரன்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆத்தூர் தொகுதி, கரியகோவில்வளவிலுள்ள அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஆத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பெத்தநாயக்கன்பாளையம் ஊராட்சி ஒன்றியம், கரியகோவில்வளவில் இயங்கி வரும் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட உயர்நிலைப் பள்ளியை, அப்பள்ளி அமைந்திருக்கும் பகுதியில் அமைந்துள்ள மாணாக்கர்களின் எண்ணிக்கை மற்றும் நிதிநிலைமையைக் கருத்திற்கொண்டு மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலோடு நடைபெறும் நல்லரசால் மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்திட ஆய்வு செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. மாதேஸ்வரன் அவர்கள்.*

திரு. சு. மாதேஸ்வரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மக்களால் நான், மக்களுக்காக நான்' என்ற உயர்ந்த*

2015 ஏப்ரல் 1]

இலட்சியத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மலர்ப்பாதம் பணிந்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கரியகோவில்வளவில் உள்ள அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட உயர்நிலைப் பள்ளியில் சுமார் 450 மாணாக்கர்கள் பயின்று வருகிறார்கள். தற்சமயம் இவர்கள் மேல்நிலைப் பள்ளிக்குச் செல்ல வேண்டுமென்றால், சுமார் 12 கிலோ மீட்டர் செல்ல வேண்டும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இவ்வாண்டே இப்பள்ளியினைத் தரமுயர்த்திச் செயல்படுவதற்கு முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், ஆத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கரியகோவில்வளவில் இயங்கி வரும் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட உயர்நிலைப் பள்ளியானது 1981 ஆம் ஆண்டில் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட தொடக்கப் பள்ளியாகத் துவங்கப்பட்டு, 1987-ல் நடுநிலைப் பள்ளியாகவும், 2006-ல் உயர்நிலைப் பள்ளியாகவும் தரமுயர்த்தப்பட்டு இயங்கி வருகிறது. தற்போது இந்த அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட உயர்நிலைப் பள்ளி 167 மாணவர்கள், 133 மாணவிகள் ஆக மொத்தம் 300 மாணவ-மாணவிகளுடன் 5 பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் ஒரு தலைமையாசிரியர் ஆகியோருடன் இயங்கி வருகிறது. கரியகோவில்வளவில் வசிக்கும் 1,270 மக்களில் 1,260 நபர்கள் பழங்குடி இனத்தைச் சார்ந்தவர்களாவர். கரியகோவில்வளவில் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட உயர்நிலைப் பள்ளியிலிருந்து சுமார் 11 கிலோ மீட்டர் தூரத்தில் கருமந்துறை அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட மேல்நிலைப் பள்ளி இயங்கி வருகிறது. இருப்பினும், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் பாதுகாவலராகத் திகழும் மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் நடைபெறும் இப்புனித அரசு கூடுதல் வகுப்பறைகள் கட்டுவதற்கான இடவசதி, திட்டத்தின் பயன்பாடு மற்றும் நிதிநிலை இவற்றைக் கருத்திற்கொண்டு

கரியகோவில்வளவில் உள்ள அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட உயர்நிலைப் பள்ளியினை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்திட நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. மாதேஸ்வரன் அவர்கள்.*

திரு. சு. மாதேஸ்வரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான ஆலோசனைக்கேற்ப நடைமுறைப்படுத்தப்படுமென்று கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றி கூறி அமருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 117, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பொன்னுசாமி, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

117—

வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம்

***37901—திரு. கே. பொன்னுசாமி:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாராபுரம் தொகுதி, தாராபுரம் வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தாராபுரம் வட்டாட்சியர் அலுவலகம் நல்ல நிலையிலே உள்ளது. மேலும், வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள பகுதியில் தனி வட்டாட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்), வட்ட வழங்கல் பிரிவு மற்றும் தேர்தல் பிரிவு மற்றும் கூட்ட அரங்கம் ஆகியவற்றைத் தனியே கட்ட பொதுப் பணித்